# தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பற்றிய நிகழ்நிலைத் தகவல் சேகரிப்பு – 2021

**தொகைமதிப்பின் கீழ் / உள்ளடக்கப்படாத பணியாளர்கள்**

- *தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்கள் மற்றும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களும்.*
- *அதற்கமைய நிரந்தர/ தற்காலிக/ அமைய அல்லது ஒப்பந்த அடிப்படையில் திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களும் இந்த வினாக்கொத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.*
- *பிரசவ விடுமுறை/ அரை சம்பள விடுமுறை/ சம்பளமற்ற விடுமுறை/ கல்வி விடுமுறை போன்ற பல்வேறு காரணங்களுக்காக தற்போது விடுப்பில் உள்ள திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களும் இரண்டாம் நிலை அடிப்படையில் பிற நிறுவனங்களில் பணிபுரிய தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களும் இந்த வினாக்கொத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.*
- *எந்தவொரு துறையிலும்/ கிளையிலும்/ அலுவலகத்திலும் கடமையாற்றும் பயிற்சி பணியாளர்கள் (பொது சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படாத) மற்றும் தற்போது திணைக்களத்தின் ஏதாதொரு பிரிவில் சேவைக்காலப் (இன்டர்ன்ஷிப்) பயிற்சியைப் பெற்று வரும் பல்கலைக்கழக மாணவர்கள் இதில் உள்ளடக்கப்படுவதில்லை.*
- *ஒரு பணியாளர் இரண்டு இடங்களில் பணிபுரிந்தால், இந்தக் வினாக்கொத்தை அவரது நிரந்தர சேவை நிலையத்தில், அதாவது வாரத்தின் பெரும்பாலான நாட்கள் பணிபுரியும் அலுவலகம் தொடர்பாக மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும்.*

**<u>தகவல் வழங்குவதை ஆரம்பித்தல்</u>**

*மேசைக் கணினி, மடிக் கணினி, டெப்லெட் அல்லது சூட்டிகைத் தொலபேசியைப் பயன்படுத்தி உங்கள் தகவல்களைப் பதியலாம். முதலில், Google Chrome, Microsoft Edge அல்லது Mozilla Firefox போன்ற எந்த இணைய உலாவியையும் பயன்படுத்தி உங்கள் Windows கணினியில் இணையத்தினுள் பிவேசிக்கவும். அல்லது Android இல் இயங்கும் சூட்டிகைத் தொ லைபேசியைப் பயன்படுத்தி இந்தத் தகவலை வழங்கலாம்.*

*இணையத்தளத்தினுள் பிரவேசித்த பின்னர் <u>https://data.statistics.gov.lk/dcs</u> என்ற இணைய முகவரியை வழங்குவதன் மூலம் பின்வரும் பக்கத்தை அணுகலாம்.*




- நீங்கள் ஏற்கனவே பெற்ற பயனர் பெயர் *(User Name)* மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி *https://data.statistics.gov.lk/dcs* க்குச் செல்லவும். தரவை வழங்குவதற்கான பயனர் பெயர் என்பது திணைக்களத்தினால் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியாளர் எண்ணாகும். *(Employee Number)*. உங்கள் கடவுச்சொல் உங்கள் பிரிவுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது இது *6* இலக்கத்தினைக்கொண்ட எழுமாற்று எண்ணாகும்.
- ஜனவரி *18* க்கு அமைவாகத் தொகைமதிப்பு வினாக்கொத்தில் உள்ள அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கவும்.
- இணையத் தளத்தினை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை விளக்கும் இந்த பயனர் கையேட்டை *(User Manual)* வாசிப்பதன் மூலம் இந்த பணி தொடர்பில் நீங்கள் தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லையும் சரியாக உள்ளிட்டதன் பிறகு, நீங்கள் தகவல் வழங்க விரும்பும் மொழியைத் தேர்வு செய்ய முடியும். இந்த வினாக்கொத்தினை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய எந்த மொழிகளிலும் பூர்த்திசெய்வதற்கான வசதி உங்களுக்கு ஏற்படுத்தப்பட்டு ள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்ளைச் சேகரித்தல் 2021 Welcome, MR KARUNAR...

Welcome

**Employee Name :** MR MRP KARUNARATHNA
**Emp No :** 59511

Dear Employee,
If the above details are **correct**, please click **"Proceed"** button to continue the survey.

உங்களது தொகைமதிப்பு தகவல்களை உள்ளடக்குவதற்கு முன்னர் உங்களால் உள்ளிடப்பட்ட பெயர் மற்றும் பணியாளர் இலக்கம் சரியானதா எனப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு வாய்ப்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உங்கள் பெயர் அல்லது பணியாளர் இலக்கம் தவறாக இருந்தால் அல்லது இந்தத் தரவு சேகரிப்பில் சிக்கல்கள் இருந்தால், அதற்குப் பதிலளிப்பதில் உங்களுக்கு உதவக்கூடிய ஆராய்ச்சி மற்றும் விசேட கற்கைகள் பிரிவைச் சேர்ந்த சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர், மற்றும் புள்ளிவிபரவியலாளர்களை தொடர்பு கொள்ளக் கூடிய தகவல்கள் இந்தப் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளன.

Dear Employee,
If the above details are **correct**, please click **"Proceed"** button to continue the survey.

If the details are incorrect or any issue regarding this questionnaire please contact the following officers at the 'Research and Special Studies Division',

| Name | Designation | Telephone |
|---|---|---|
| Ms. K.K.C. Shiromalie | Senior Statistician | 011 214 7478 |
| Mr. W.H.D.C.P. Wjesuriya | Senior Statistician | 011 214 7477 |
| Ms. B.G.G.K. Bambaranda | Statistician | 011 214 7480 |
| Mr. G.A.K.N.I. Abeyrathne | Statistician | 011 214 7472 |

✔ Proceed

உங்கள் பெயர் மற்றும் உங்கள் பணியாளர் இலக்கம் சரியாக இருந்தால், பக்கத்தின் கீழே உள்ள *"தொடரவும்" (Proceed)* என்ற பொத்தானைக் அழுத்துவதன் மூலம் தகவல் வழங்கும் வேலைத்திட்டத்தினுள் நுழையலாம்.

இந்த வினாக்கொத்தானது 12 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் (விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் தவிர) அனைத்து வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளிக்கவேண்டும்.

***பகுதி 1 - தற்போதைய சேவை நிலையம் / பதவி பற்றிய தகவல்***



## 1. தற்போதைய சேவை நிலையம்/ பதவி சம்பந்தமான விபரங்கள்

1.1 சேவை நிலையத்தின் பெயர் * : ஆராய்ச்சி மற்றும் விசேட கற்கைகள் பிரிவு

Those who have two work places, give the details of the permanent work place .

1.2 சேவை நிலையத்தின் முகவரி * : 305/7 Polduwa road, Baththaramulla

1.3 சேவை நிலையம் அமைந்துள்ள நிர்வாக மாவட்டம் * : கொழும்பு

1.4 சேவை நிலையம் அமைந்துள்ள பி.செ.பிரிவு * : கடுவலை

1.5 பதவி * : புள்ளிவிபர உத்தியோகத்தர்

1.6 உமது சேவை அலுவலகம் சார்ந்ததா? அல்லது அலுவலகம் மற்றும் வெளிக்களம் சார்ந்ததா * :

1. அலுவலகம் சார்ந்த
2. அலுவலகம் மற்றும் வெளிக்களம் சார்ந்த

* Required fields

***பகுதி 1 - தற்போதைய சேவை நிலையம் / பதவி பற்றிய தகவல்***

| **வினா இலக்கம்** | **வினாக்கள் மற்றும் வினாக்களுக்குப் பதிலளிக்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை** |
|---|---|
| *1.* | *தற்போதைய சேவை நிலையம் / பதவி பற்றிய தகவல்*<br><br>*உங்களின் தற்போதைய பணியிடம் தொடர்பாக இந்தப் பகுதியை பூரணப்படுத்தவும். நீங்கள் இரண்டு பணியிடங்களில் பணிபுரிந்தால், வாரத்தின் அதிக நாட்கள் நீங்கள் பணிபுரியும் நிரந்தர பணியிடத்திற்கு அமைவாக இந்தப் பகுதியை பூரணப்படுத்தவும்.* |
| *1.1* | *வேலை செய்யும் இடத்தின் பெயர்*<br>*கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து நீங்கள் பணிபுரியும் இடத்தின் பெயரைத் தேர்ந்தெடுக்கவும்.* |
| *1.2* | *பணியிடத்தின் முகவரி*<br>*பணியிடத்தின் தபால் முகவரியை நீங்கள் விரும்பும் மொழியில் குறிப்பிடவும்.* |
| *1.3* | *பணியிடம் அமைந்துள்ள நிர்வாக மாவட்டம்*<br>*இந்த வினாவிற்கு அமைவாக கீழே தரப்பட்டுள்ள பட்டியலில், (Drop down list) இல் மேலே 1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி உங்கள் பணியிடம் அமைந்துள்ள மாவட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும்.* |
| *1.4* | *பணியிடம் அமைந்துள்ள பிரதேச செயலகம்*<br>*இந்த வினாவிற்கு அமைவாக இணையத்தில் வழங்கப்பட்ட கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் (Drop down list) இல் நீங்கள் மேலே 1.3 இல் வழங்கிய மாவட்டத்துடன் தொடர்புடைய பிரதேச செயலகங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். அதிலிருந்து உங்கள் பணியிடம் அமைந்துள்ள பிரதேச செயலகத்தைத் தேர்ந்தெடுக்கவும்.* |
| *1.5* | *பதவி*<br>*இங்கே கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் (Drop down list) இல் இருந்து உங்கள் நிரந்தரப் பதவியைத் தேர்ந்தெடுக்கவும். நீங்கள் வேறொரு பதவியில் செயல்பட்டாலும்/ கடமைகளை மேற்கொண்டாலும் உங்கள் நிரந்தரப் பதவியை இங்கே தேர்ந்தெடுக்கவும்* |

| | |
|---|---|
| *1.6* | *நீங்கள் கடமையாற்றுவது அலுவலகத்திலா அல்லது வெளிக்களம் மற்றும் அலுவலகத்திலா?*<br>*வாரத்தின் வேலை நாட்களில் ஒவ்வொரு நாளும் நீங்கள் அலுவலகத்தில் வேலை செய்ய வேண்டியிருந்தால், அலுவலகம் என்பதற்காகக் குறியீடு 1 ஐப் பதியவும். நீங்கள் தற்போது அலுவலகம் மற்றும் வெளிக்களம் சார்ந்த பதவியொன்றை வகித்தாலும் தற்போது தினமும் அலுவலகம் சார்நத கடமைகளில் ஈடுபட்டால் , குறியீடு 1 ஐப் பதியவும்.*<br>***உதா-*** *தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள்*<br>*நீங்கள் வழக்கமாக வாரத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் களப்பணியில் இருந்தால்,வெளிக்களம் மற்றும் அலுவலகத்திற்காக குறியீடு 2 ஐப் பதியுங்கள்.* |

இந்தத் தகவலைச் சரியாக உள்ளிட்ட பிறகு, பக்கத்தின் கீழே உள்ள 'Save' என்ற பொத்தானைக் கிளிக் செய்யவும். அனைத்துக் கேள்விகளுக்கும் நீங்கள் பதிலளித்திருந்தால், பக்கத்தின் மேல் ஒரு செய்தி தோன்றும். அனைத்துத் தகவல்களும் சரியாக உள்ளிடப்பட்டுள்ளதை உறுதிசெய்த பிறகு, 'அடுத்து செல்' (Go to next) என்ற பொத்தானைக் கிளிக் செய்யவும்.




பகுதி 1 ஐ வெற்றிகரமாக பூரணப்படுத்திய பிறகு, வினாக்கொத்தின் பகுதி 2 க்கு நீங்கள் திசைப்படுத்தப்படுவீர்கள். இதில் உங்களது தனிப்பட்ட தகவல்கள் பற்றிய விபரங்கள் வினவப்படும்.

## பகுதி 2 – தனிப்பட்ட தகவல்கள்



| | |
|---|---|
| **2.** | **தனிப்பட்ட தகவல்கள்** |
| *2.1* | சம்பள இலக்கம்<br>இது சம்பளப் பட்டியலில் *EMP No.* எனக் குறிப்பிடப்பட்ட இலக்கமாகும். நீங்கள் தகவல்ளை உள்ளடக்கும் வேலைத்திட்டத்தில் நுழைந்தபோது நீங்கள் உள்ளிட்ட சம்பள இலக்கம் தானாகவே இங்கு திரையில் காட்டப்படும். அந்த எண்ணில் எந்த மாற்றமும் செய்ய நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள். இருப்பினும், இலக்கம் சரியானதா என்பதை இருமுறை சரி பார்க்கவும். |
| *2.2* | முதலெழுத்துக்களுடன் பெயர் *(*ஆங்கிலத்தில்*)*<br>உங்கள் பெயர் *(*முதலெழுத்துக்களுடன்*)* இங்கு தன்னிச்சையாவே காட்டப்படும். பெயர் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும். இங்கு குறிப்பிடப்படுவது உங்கள் சம்பளப் பட்டியலில் உள்ள பெயர் அல்லது உங்கள் பிரிவினால் பிரிவு *15* க்கு அனுப்பப்பட்டுள்ள பெயராகும். *(*கடமை நோக்கங்களுக்காக நீங்கள் பயன்படுத்தும் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட பெயர் இந்தத் தரவு சேகரிப்பில் வழங்கப்பட வேண்டும். கடமையின் போது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உங்கள் விருப்பப்படி வெவ்வேறு பெயர்களைப் பயன்படுத்த முடியாதென்பதுடன் சட்டபூர்வமாக பயன்படுத்தப்படும் பெயர் இங்கே குறிப்பிடப்படல் வேண்டும்.*)*<br><br>அதன்படி, உங்கள் பெயர் அல்லது பெயரிலுள்ள எழுத்துக்கள் பிழையாக இருந்தால், உங்கள் பெயரை சரியாகத் திருத்தி எழுதுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் உங்கள் பெயருக்கு கீழே உள்ள வெற்றுக் கோட்டில் முலெழுத்துக்களுடன் ஆங்கில பெரிய எழுத்துக்களில் *(Capital Letters)* சரியான பெயரை உள்ளிடவும். *(*முலெழுத்துக்களுக்கு இடையில் இடைவெளிகள் அல்லது புள்ளிகளைப் பயன்படுத்த வேண்டாம். முதலெழுத்துக்களுக்கும் கடைசிப் பெயருக்கும் இடையில் ஒரு இடைவெளியை மட்டும் கொண்டு பெயரை எழுதவும், **உதா** *- LMK PERERA)* |
| *2.3* | முதலெழுத்துக்களுடன் பெயர் *(*சிங்களம் */* தமிழ்*)*<br>மேலே உள்ள பெயரை இங்கே சிங்களம் அல்லது தமிழில் உள்ளிடவும் |
| *2.4* | தேசிய அடையாள அட்டை இலக்கம்<br>தேசிய அடையாள அட்டை இலக்கத்தைச் சரியாக உள்ளிடவும். *(*புதிய அல்லது பழைய இலக்கத்தை உள்ளிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதாவது *V* அல்லது *X* என்ற எழுத்துடன் *9* எண்களைக் கொண்ட பழைய இலக்கம் அல்லது *12* எண்களைக் கொண்ட புதிய இலக்கம்.*)* |
| *2.5* | கைபேசி இலக்கம்<br>உங்கள் கைபேசியின் இலக்கத்தை சரியாக உள்ளிடவும். *(10* இலக்கங்களுடன்*)* |
| *2.6* | பால் விபரம்<br>உங்கள் பாலினத்துடன் தொடர்புடைய குறியீட்டை அடையாளமிடுக. |
| *2.7* | பிறந்த திகதி<br>*mm / dd / yyyy* என காட்டப்படும் எழுத்துக்களில் உங்கள் பிறந்த திகதியை *(*முதல் மாதம், இரண்டாவது நாள் மற்றும் இறுதியில் வருடம் என்றவாறு*)* சரியாக எழுதவும். உதா *-* உங்கள் பிறந்த திகதி ஜூலை *24, 1990* எனில், அதனை பின்வருமாறு குறிப்பிட வேண்டும்: *07/24/1990*<br><br>இங்கு உங்களது பிறந்த திகதியை நாட்காட்டியிலிருந்து தெரிவுசெய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. |
| *2.8* | கடந்த பிறந்த நாளுக்கான வயது *(*ஆண்டுகள்*)*<br>நீங்கள் உள்ளிட்ட பிறந்த திகதியை பொறுத்து, உங்கள் கடைசி பிறந்த நாளை நிறைவு செய்யும் வயது தரப்பட்டுள்ள கூட்டினுள் தானாகவே காட்டப்படும். அந்த வயது தவறாக இருந்தால், பிறந்த திகதியை மீண்டும் சரிபார்த்து திருத்தவும்.<br>**உதா:** ஜூலை *24, 1990* இல் பிறந்த ஒருவருக்கு கடந்த பிறந்த திகதியில் வயது *31* ஆகத் திரையில் காட்டப்பட வேண்டும். அப்படி தெரிகின்றதா என்று சரி பார்க்க வேண்டும். |

2.9 இனப்பிரிவு * :

- 1. சிங்களவர்
- 2. இலங்கைத் தமிழர்
- 3. இந்தியத் தமிழர்
- 4. இலங்கைச் சோனகர்
- 5. பறங்கியர்
- 6. மலாயர்
- 7. ஏனைய (குறிப்பிடவும்)

2.10 சமயம் * :

- 1. பௌத்தம்
- 2. இந்து
- 3. இஸ்லாம்
- 4. றோமன் கத்தோலிக்கம்
- 5. ஏனைய கிறிஸ்தவம்
- 6. ஏனைய (குறிப்பிடவும்)

2.11 விவாக அந்தஸ்து * :

- 1. ஒருபோதும் திருமணமாகாதவர்
- 2. தற்போது திருமணமானவர்
- 3. தாரமிழந்தவர்
- 4. விவாகரத்து பெற்றவர்
- 5. சட்டப்படி பிரிந்தவர்
- 6. ஏனைய (குறிப்பிடவும்)

| | |
|---|---|
| *2.9* | இனத் தொகுதி<br>நீங்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவரோ அதற்குரிய குறியீட்டைக் குறிக்கவும். நீங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள *1-6* வகையான இனத் தொகுதியைச் சேர்ந்தவராக இல்லாவிட்டால்,வேறு என்பதன் கீழ் குறியீடு 7ஐக் குறிக்கவும். உங்கள் இனத்தைக் குறிக்க கீழே ஒரு கூடு தோன்றும். நீங்கள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஆறு இனக் குழுக்களில் உள்ளடக்கப்படவில்லை என்றால் மட்டும் அந்த கூட்டில் உங்கள் இனத்தை எழுதுங்கள். |
| *2.10* | மதம்<br>உங்கள் மதத்திற்கான குறியீட்டைக் குறிக்கவும். நீங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மதத்தைச் சேர்ந்தவராக இல்லாவிட்டால் வேறு என்பதன் கீழ் குறியீடு 6 ஐக் குறிக்கவும். பின்னர் உங்கள் மதத்தைக் குறிக்க கீழே ஒரு கூடு தோன்றும். நீங்கள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஐந்து மதங்களுள் உள்ளடக்கப்படவில்லை என்றால், அந்த கூட்டில் உங்கள் மதத்தை எழுதுங்கள். |
| *2.11* | விவாக அந்தஸ்து<br>உங்களின் தற்போதைய விவாக அந்தஸ்துடன் தொடர்புடைய குறியீட்டை அடையாளமிடுக.<br>**திருமணமாகவில்லை**, அதாவது நீங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால், - குறியீடு *1* இனைப் பதிக.<br>**தற்போது திருமணமானவர்** – தொகைமதிப்பு நடாத்தப்படும் காலப்பகுதிக்குள் நீங்கள் திருமணம் செய்து கொண்டிருந்தால் குறியீடு. 2ஐத் தேர்ந்தெடுக்கவும். சட்டப்பூர்வ /சம்பிரதாய பூர்வமான திருமணங்கள் மற்றும் சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும் ஒன்றாக வாழும் *(Living together)* நபர்களை இதன் கீழ் குறிப்பிடவும்.<br>**தாரமிழந்த** - கணவன் / மனைவி இறந்துவிட்ட மற்றும் தொகைமதிப்பு நடாத்தப்படும் காலப்பகுதிக்குள் மறுமணம் செய்யாத நபர்கள் இதில் அடங்குவர்.<br>**விவாகரத்து** - நீதிமன்றத்தால் திருமணச் சான்றிதழ் இரத்து செய்யப்பட்ட நபர்கள் மற்றும் தொகைமதிப்பு நடாத்தப்படும் காலப்பகுதிக்குள் மறுமணம் செய்து கொள்ளாதவர்கள்.<br>**சட்ட ரீதியாகப் பிரிந்து வாழும்** - சட்ட ரீதியாகப் திருமணம் செய்து, விவாகரத்து செய்யாத ஒரு நபர், ஆனால் சட்டத்தால் அல்லது நீதிமன்ற உத்தரவின் மூலம் சட்டப்பூர்வமாக பிரிக்கப்பட்டவர் இதில் அடங்குவார்.<br>**வேறு** - உங்கள் விவாக அந்தஸ்து மேலே உள்ள எந்த விவாக அந்தஸ்து நிலையிலும் இல்லை என்றால், வேறு என்பதன் கீழ் குறியீடு 6 இனைத் தேர்ந்தெடுக்கவும். உங்கள் திருமண நிலையைக் குறிக்க ஒரு கூடு கீழே தோன்றும். உங்களின் தற்போதைய திருமண நிலையை அந்தக் கூட்டில் பதியவும்.<br>உதா: தனித்தனியாக வாழ்வது, இது சட்டப்பூர்வமானது அல்ல . |



2.12 தற்போது திருமணமானவராயின், துணைவர் தொடர்பான தகவல்கள்

2.12.1 உமது துணைவரின் தொழில் அந்தஸ்து * :

- 1. அரச உத்தியோகத்தர்
- 2. அரச சார்பு உத்தியோகத்தர்
- 3. தனியார் துறைப் பணியாளர்
- 4. தமது பொருளாதார நடவடிக்கையில் / சுயதொழிலில் ஈடுபடுபவர்
- 5. வெநாட்டில் தொழில் புரிபவர்
- 6. ஓய்வு பெற்றவர்
- 7. தொழில் புரியவில்லை

2.12.2 துணைவரின் சேவை நிலையம் * :

2.12.3 உமது துணைவர் தொழில் / பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ளும் மாவட்டம் * :

Choose a district...

2.13 பிள்ளைகள் தொடர்பான தகவல்கள்

2.13.1 பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை * :

0

பிள்ளைகள் இல்லை எனின், 0 எனக் குறிப்பிடுக

2.13.2 அவர்களில் விவாகமாகாத 18 வயதிலும் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை * :

0

இல்லை எனின், 0 எனக் குறிப்பிடுக

* Required fields

| | |
|---|---|
| *2.12* | *நீங்கள் தற்போது திருமணமானவராக இருந்தால் வாழ்க்கைத் துணை பற்றிய தகவல்*<br>*நீங்கள் தற்போது திருமணமானவராக இருந்தால் மட்டுமே இந்த வினா தோன்றும், அதாவது 2.11க்கு 2 இனை அடையாளமிட்டால் மட்டுமேயாகும். இல்லையெனில், கணினி வேலைத்திட்டம் உங்களை வினா 2.13க்கு பரிந்துரைக்கும்.* |
| *2.12.1* | *வாழ்க்கைத் துணையின் தொழில் அந்தஸ்து*<br>*இதன் கீழ் உங்கள் கணவன்/மனைவியின் வேலை/பொருளாதார நிலையை தேர்வு செய்ய வேண்டும். கணவன்/மனைவி அரச துறை அல்லது தனியார் துறையில் முறைசார் மற்றும் முறைசாரா துறையிலோ வேலைசெய்தால், அல்லது வெளிநாட்டில்வேலை செய்தால், ஓய்வு பெற்றிருந்தால் அல்லது வேலை இல்லை எனில், சரியான பதிலை தகுந்தவாறு பதிய வேண்டும்*<br>*உங்கள் கணவன்/மனைவி ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்/பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால், பிரதான பொருளாதார செயல்பாட்டிற்கான குறியீட்டைப் பதியவும்.*<br>*உங்கள் மனைவி வேலையில் இருந்து ஓய்வு பெற்று தற்போது சில பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால், அந்தச் செயலுக்கான குறியீட்டைக் குறிக்கவும்.*<br>*உங்கள் கணவன்/மனைவி ஓய்வு பெற்றவர் அல்லது உங்கள் மனைவி வேலை செய்யவில்லை என்பதை நீங்கள் தேர்வு செய்தால், நீங்கள் கேள்வி 2.13க்கு பரிந்துரைக்கப்படுவீர்கள்.* |
| *2.12.2* | *கணவன்/மனைவி வேலை செய்யும் இடம்*<br>*2.12.1க்கான குறியீட்டு இலக்கம் 1, 2, 3 அல்லது 5ஐக் குறித்திருந்தால், பணியிடத்தின் பெயரை இங்கே சரியாக உள்ளிடவும். 2.12.1ல் குறியீடு 4ஐக் குறித்திருந்தால், பொருளாதாரச் செயல்பாடு / சுயதொழில் நடைபெறும் இடத்தின் பெயரை எழுதுங்கள்.*<br>***உதா:** வீடு, வேறு நிரந்தர இடம், குத்தகை / வாடகை அடிப்படையில் பெறப்பட்ட இடம்* |
| *2.12.3* | *உங்கள் கணவன்/மனைவி வேலை செய்யும் மாவட்டம் / நாடு*<br>*கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் (Drop down list) இருந்து உங்கள் கணவன்/மனைவி வேலைசெய்யும் பணியிடம் அமைந்துள்ள அல்லது பொருளாதார செயல்பாடு / சுய வேலைவாய்ப்பு மேறகொள்ளப்படும் மாவட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும்.*<br>*அவர் வெளிநாட்டில் பணிபுரிந்தால், வழங்கப்பட்ட பட்டியலில் தொடர்புடைய நாட்டின் பெயரைத் தேர்ந்தெடுக்கவும். உங்கள் கணவன்/மனைவி பணிபுரியும் நாடு பட்டியலிடப்படவில்லை என்றால், "வேறு" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இதன்போது வேறு என்ற நிரைக்குக் கீழே ஒரு வெற்று கூடு தோன்றும். அந்த கூட்டில் உங்கள் கணவன்/மனைவி பணிபுரியும் நாட்டை உள்ளிடவும்.* |

| | |
|---|---|
| *2.13* | குழந்தைகள் பற்றிய தகவல்கள்<br>திருமண நிலையைப் பொருட்படுத்தாமல், இந்த வினாவிற்கு அனைத்து ஊழியர்களும் பதிலளிக்க வேண்டும். |
| *213.1.* | மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை (குழந்தைகள் இல்லை என்றால் *0* எனக் குறிப்பிடவும்)<br>உங்களுக்கு குழந்தைகள் இருந்தால், தற்போது வாழும் மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையை பதிவு செய்யவும். (தத்தெடுத்த குழந்தைகளையும் இங்கே சேர்த்துக் கொள்ளுங்கள், அவர்கள் உங்களில் தங்கியிருந்தால்.) குழந்தைகள் இல்லை என்றாலோ அல்லது குழந்தைகள் யாரும் தற்சமயம் உயிருடன் இல்லை என்றாலோ, *0* என்று எழுதுங்கள். |
| *2.13.2* | *18* வயதுக்குட்பட்ட திருமணமாகாத பிள்ளைகளின் எண்ணிக்கை (இல்லையெனில் *0* எனக் குறிப்பிடவும்)<br>தற்போது உங்கள் பிள்ளைகளுள் உயிருடன் இருக்கும் *18* வயதுக்குட்பட்ட திருமணமாகாத பிள்ளைகளின் எண்ணிக்கையை வழங்கப்பட்டவெற்றுக் கூட்டில் உள்ளிடவும். *18* வயதுக்குட்பட்ட திருமணமாகாத பிள்ளைகள் இல்லை என்றால், *0* எனக் குறிப்பிடவும். *18* வயதுக்குட்பட்ட பிள்ளைகள் திருமணமானவர்களாக இருந்தால் அவர்களை இங்கு சேர்க்கக் கூடாது. பிள்ளைகள் இல்லை அல்லது பிள்ளைகள் யாரும் உயிருடன் இல்லை என்றால், *0* எனக் குறிப்பிடவும்) |

இந்தத் தகவலைச் சரியாக உள்ளிட்ட பிறகு, பக்கத்தின் கீழே உள்ள ‘சேமி’ (*Save*) பொத்தானைக் கிளிக் செய்யவும். அனைத்து தகவல்களும் சரியாக உள்ளிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்த பிறகு, திரையின் மேற்புறத்தில் உள்ள 'அடுத்து செல்லவும்' (*Go to next*) பொத்தானைக் கிளிக் செய்யவும்.

பகுதி *2*ஐ வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் வினாக்கொத்தின் பகுதி *3*க்கு நீங்கள் திசைப்படுத்தப்படுவீர்கள். இந்தப் பிரிவு உங்கள் நியமனம் பற்றிய தகவல்களை வினவுகின்றது.

## பகுதி *3* - உங்கள் நியமனத்திற்கமைவான தகவல்கள்



3. நியமனம் தொடர்பான தகவல்கள்

3.1 நியமனத்தின் தன்மை * :
- 1. நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்தடையதும்
- 2. தற்காலிகம்
- 3. அமையம்
- 4. ஒப்பந்த அடிப்படை
- 5. ஏனைய

3.2 பதவி உரித்துடைய சேவைப் பிரிவு * :
- 1. நாடளாவிய சேவை
- 2. இணைந்த சேவை
- 3. சேவைக்குள் உள்ளடங்காதது

3.3 உங்கள் நியமனம் யாதாயினும் சேவைப் பிரிவுக்குள் அமைந்திருப்பின்; சேவையின் பெயர் மற்றும் வகுப்பு / தரம்

3.3.1 சேவையின் பெயர் * : Choose a service...

3.3.2 வகுப்பு / தரம் * : Choose a class/grade...

3.4 அரச முதல் நியமனத் திகதி * : 01 / 01 / 0000

4. உங்களின் சம்பளத்தொகுதி * : Choose a salary code...

* Required fields

| | |
|---|---|
| ***3. உங்கள் நியமனத்திற்கமைவான தகவல்கள்*** | |
| *3.1* | *நியமனத்தின் தன்மை*<br>*உங்கள் நியமனத்தின் தன்மைக்கு ஏற்ப தொடர்புடைய குறியீட்டை அடையாளமிடுங்கள். நியமனத்தின் தன்மை உங்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உங்கள் நியமனத்தின் தன்மை நிரந்தரம் என்றால் மட்டுமே குறியீடு 1 இனை அடையாளமிடுங்கள். நீங்கள் நிரந்தர நியமனம் பெறவில்லை என்றால், அதாவது, உங்கள் நியமனம் தற்காலிக, அமையம் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தால் முறையே 2, 3 மற்றும் 4 குறியீடுகளைக் குறிக்கவும்.*<br>*உங்கள் நியமனத்தின் தன்மை 1-4 வகையைச் சேர்ந்தது அல்ல எனின் வேறு என்பதன் கீழ் குறியீடு 5 இனைப் பதியவும்.வேறு என்பதன் கீழ் உங்கள் நியமனத்தின் தன்மையைப் பதிவதற்கான வெற்றிடத்தின் கீழே ஒரு வெற்றுக் கூடு தோன்றும். உங்கள் நியமனத்தின் தன்மை மேற்கூறியவற்றில் எதற்கும் பொருந்தவில்லை என்றால், அந்த வெற்றுக் கூட்டில் நியமனத்தின் தன்மையை எழுதுங்கள்.*<br><br>*உங்கள் நியமனம் நிரந்தரம் மற்றும் ஓய்வூதியம் பெறக்கூடிய பதவியாக இருந்தால், அதாவது குறியீடு 1 தேர்ந்தெடுக்கப்பட்டால், நீங்கள் வினா இலக்கம் 3.2 க்கு பரிந்துரைக்கப்படுவீர்கள். ஆனால் உங்கள் நியமனம் மற்றும் நிரந்தர ஓய்வூதியம் உரித்துடையதல்ல என்றால், நீங்கள் நேரடியாக வினா இலக்கம் 3.4க்கு பரிந்துரைக்கப்படுவீர்கள்.* |
| *3.2* | *நியமனம் உரித்தாகும் சேவைகளின் வகை*<br>*உங்கள் நியமனம் ஒரு சேவைக்கானது எனில், அந்தச் சேவையைப் பற்றிய தகவலை இங்கே வழங்க வேண்டும்.*<br>*உங்கள் நியமனம் ஒரு குறிப்பிட்ட சேவையைச் சேர்ந்ததாக இருந்தால், சேவை வகைக்கான குறியீடு1 அல்லது 2 இல் பொருத்தமானதைக் குறிக்கவும். சேவை இல்லை என்றால் குறியீடு 3ஐப் பதியவும்.*<br><br>*தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரப் பணியாளர்கள் எந்தவொரு சேவையையும் சேர்ந்தவர்கள் அல்லர், அந்த பதவிகள் துறைசார் பதவிகளாகும். அத்தகைய அதிகாரிகள் சேவையைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதால் குறியீடு 3 ஐப் பதியவும்.* |
| *3.3* | *உங்கள் நியமனம் ஏதேனும் ஒரு சேவையைச் சேர்ந்ததாக இருந்தால், சேவையின் பெயர் மற்றும் வகுப்பு / தரம்*<br><br>*நீங்கள் நாடளாவிய அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட சேவைக்குரிய பதவியை வகித்தால் (அதாவது 3.2 இல் 1 அல்லது 2 குறியீடுகள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால்) இந்த வினாவிற்குப் நீங்கள் பரிந்துரைக்கப்படுவீர்கள்.* |
| *3.3.1* | *சேவையின் பெயர்*<br>*கீழ்தோன்றும் பட்டியலில் இருந்து உங்கள் நியமனத்திற்குரிய சேவையின் பெயரைத் தேர்ந்தெடுக்கவும்.* |
| *3.3.2* | *வகுப்பு / தரம்*<br>*கீழ்தோன்றும் பட்டியலில் இருந்து உங்கள் நியமனத்திற்குரிய வகுப்பு/ தரத்தைத் தேர்ந்தெடுக்கவும்.* |
| *3.4* | *அரச சேவையில் முதல் நியமனம் திகதி*<br>*அரச/ அரசு சார்ந்த உங்கள் முதல் நியமன திகதியைக் குறிப்பிடவும். அரசு/அரசு சார்ந்த நிறுவனத்தில் பணிபுரிந்து பதவியை ராஜினாமா செய்துவிட்டு, புதிய நியமனத்தில் மீண்டும் அரசு/அரசு சார்ந்த பணிக்குத் திரும்பிய அதிகாரிகள் இருந்தால், அவர்கள் கடைசியாகப் பணிக்கமர்த்தப்பட்ட திகதியைக் குறிப்பிட வேண்டும்.*<br>*நிரந்தர, தற்காலிக, அமைய அல்லது ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டாலும் இந்தக் கேள்விக்கு பதிலளிக்கப்பட வேண்டும்.* |

## *பகுதி 4 - உங்களுக்குரிய சம்பளத் தொகுதி*

**4. உங்களின் சம்பளத்தொகுதி** * : MN 5 - 2016

* Required fields

### *4. உங்களுக்குரிய சம்பளத் தொகுதி*

*வினா எண் 3.1 இற்கு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு மட்டுமே இந்த வினா பொருந்தும், அதாவது நிரந்தர நியமனத்தைப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டுமேயாகும். கீழ்தோன்றும் பட்டியலில் இருந்து உங்கள் பதவிக்கான சம்பளத்தொகுதியைத் தேர்ந்தெடுக்கவும்.*

*நீங்கள் நிரந்தர அடிப்படையில் திணைக்களத்தில் பணிபுரியும் அதிகாரியாக இருந்தால், பிரிவு 3 இன் கீழ் கேள்வி 3.4 க்குப் பிறகு, அதே திரையின் கீழே உள்ள பகுதி 4க்கு நீங்கள் அனுப்பப்படுவீர்கள். இந்த பிரிவின் கீழ் உங்களுக்குரிய சம்பளத்தொகுதி தொடர்பில் வினவப்படும். நீங்கள் தற்காலிக, அமைய, ஒப்பந்தம் போன்ற பிற வடிவங்களில் பணிபுரிந்தால், வினா 4 உங்களுக்குப் பொருந்தாது என்பதால் வினா 5 க்கு பரிந்துரைக்கப்படும்*

*இந்தத் தகவலைச் சரியாக உள்ளிட்ட பிறகு, பக்கத்தின் கீழே உள்ள 'சேமி' (Save) பொத்தானைக் கிளிக் செய்யவும். அனைத்து தகவல்களும் சரியாக உள்ளிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்த பிறகு, திரையின் மேற்புறத்தில் உள்ள 'அடுத்து செல்லவும்' ( Go to next) பொத்தானைக் கிளிக் செய்யவும்.*

*பகுதிகள் 3 மற்றும் 4ஐ வெற்றிகரமாக முடித்த பிறகு, வினாக்கொத்தின் பகுதி 5, 6 மற்றும் 7 இற்கு நீங்கள் அனுப்பப்படுவீர்கள், இது உங்கள் மொழித் திறன், கல்வி மற்றும் தொழில் தகுதிகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும்.*

## *பகுதி 5 - மொழிப் புலமை*

### *5. மொழிப் புலமை*

**5.1 வாசித்தல்; எழுதல் திறன்**

**5.1.1 சிங்களம்** * :
- 1. நன்று
- 2. சாதாரணம்
- 3. திறனில்லை

**5.1.2 தமிழ்** * :
- 1. நன்று
- 2. சாதாரணம்
- 3. திறனில்லை

**5.1.3 ஆங்கிலம்** * :
- 1. நன்று
- 2. சாதாரணம்
- 3. திறனில்லை

**5.2**

**5.2.1 சிங்களம்** * :
- 1. நன்று
- 2. சாதாரணம்
- 3. திறனில்லை

**5.2.2 தமிழ்** * :
- 1. நன்று
- 2. சாதாரணம்
- 3. திறனில்லை

**5.2.3 ஆங்கிலம்** * :
- 1. நன்று
- 2. சாதாரணம்
- 3. திறனில்லை

| **5. மொழிப் புலமை** | |
|---|---|
| சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளுக்கும் தனித்தனியாகப் வாசிக்க, எழுத மற்றும் பேசவதற்கான திறன் பற்றி இங்கு கேட்கப்படும். | |
| 5.1 | வாசித்தல் மற்றும் எழுதும் திறன்<br>வாசித்தல் மற்றும் எழுதும் திறன் என்பது ஒரு குறிப்பிட்ட மொழியில் எதையாவது வாசித்து புரிந்துகொள்ளும் திறன் மற்றும் ஒரு கருத்தை யாரும் வாசித்து புரிந்துகொள்ளும் வகையில் எழுதும் திறன் ஆகும்.<br>சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெற்றுள்ள தேர்ச்சிகளுக்கமைய ஒவ்வொரு மொழிக்கமைவாகவும் நன்று, சராசரி மற்றும் முடியாது என்பதற்காக முறையே ஒன்று, 1, 2 அல்லது 3 குறியீடுகளை மட்டும் குறிக்கவும், |
| 5.2 | பேசும் திறன்<br>சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகள் தொடர்பிலும் அந்த ஒவ்வொரு மொழிகளைப் பேசுவதில் உங்களுக்கு இருக்கும் திறமையின் அளவைப் பொறுத்து நன்று, சராசரி மற்றும் முடியாது என்பதற்காக முறையே ஒன்று, 1, 2 அல்லது 3 குறியீடுகளை மட்டும் குறிக்கவும். |

## பகுதி 6 - உயர் கல்வித் தகமை

### 6. அதியுயர் கல்வித் தகைமை

6.1 பெற்றுள்ள அதியுயர் கல்வித் தகைமை * :

- 1. க.பொ.த. (சா./த.) இற்கு குறைய
- 2. க.பொ.த. (சா./த.) சித்தி
- 3. க.பொ.த. (உ./த.) சித்தி
- 4. பட்டம்
- 5. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
- 6. பட்டப்பின் படிப்பு பட்டம்
- 7. முதுத் தத்துவமானி பட்டம்
- 8. கலாநிதிப் பட்டம்

6.2 நீங்கள் இளமானிப் பட்டம் பெற்றிருப்பின் அது உரித்தாகும் பிரிவு * :

- 1. கலை
- 2. விஞ்ஞானம்
- 3. முகாமைத்துவம் / வர்த்தகம்
- 4. விவசாயம்
- 5. கணக்கியல்
- 6. ஏனைய (குறிப்பிடவும்)

6.3 நீங்கள்பெற்றுள்ள இளமானிப் பட்டம் / பட்டத்தின் பிரிவு * :

Choose a degree...

Choose a degree if more than one...

6.4 நீங்கள் பெற்றுள்ள இளமானிப் பட்டம் விசேட பட்டமாயின் பாடநெறி :

6.5 நீங்கள் பெற்றுள்ள இளமானிப் பட்டம் பொதுவாதெனின், பிரதான பாடநெறி 3 ஐக் குறிப்பிடவும் :

1

2

3

| **6. உயர் கல்வித் தகமை** | |
|---|---|
| 6.1 | பெறப்பட்ட உயர் கல்வித் தகமை<br>நீங்கள் பெற்ற மிக உயர்ந்த கல்வித் தகுதியுடன் தொடர்புடைய குறியீட்டை மட்டும் குறிக்கவும்.<br>இங்கு பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தவிர வேறு தொழில்சார் டிப்ளோமா கற்கை நெறியை நீங்கள் கற்றிருந்தால், அது தொழிற்தகைமையே தவிர கல்வித் தகைமை அல்ல. அத்தகைய சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட மிக உயர்ந்த கல்வித் தகுதியுடன் தொடர்புடைய குறியீட்டைக் குறிக்கவும்.<br>நீங்கள் பெறக்கூடிய மிக உயர்ந்த கல்வித் தகைமை க.பொ.த (உ/த) அல்லது அதிலும் குறைந்த தகுதி எனின் இந்த கேள்விக்கு பதிலளித்த பிறகு நீங்கள் பகுதி 7க்கு அனுப்பப்படுவீர்கள். ஆனால் நீங்கள் பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியைப் பெற்றிருந்தால், நீங்கள் 6.2 மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு அனுப்பப்படுவீர்கள். |

| | |
|---|---|
| *6.2* | *நீங்கள் இளமானிப் பட்டம் பெற்றிருந்தால், அது உள்ளடங்கும் துறை*<br>*இளமானிப் பட்டம் பெற்றிருந்தால், சம்பந்தப்பட்ட துறையை இதன் கீழ் குறிப்பிட வேண்டும்.*<br>*உங்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட இளமானிப் பட்டங்கள் இருந்தால், அந்த பட்டங்கள் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தவையாக இருந்தால், இதுபோன்ற இரண்டு பட்டங்களைக் குறிக்க இங்கே வாய்ப்புக்கள் தரப்பட்டுள்ளன.*<br>*உங்கள் இளமானிப் பட்டம் இங்கு பட்டியலிடப்பட்டுள்ள துறைகள் எதற்குள்ளும் உள்ளடங்கவில்லை எனில், "வேறு" என்பதன் கீழ் குறியீட்டிலக்கம் 6 ஐத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் வேறு என்ற நிரைக்குக் கீழே தோன்றும் வெற்றுக் கூட்டில் உங்கள் பட்டப் படிப்பு மேற்கூறியவற்றில் எதற்கும் பொருந்தவில்லை என்றால், அந்த வெற்றுக் கூட்டில் தொடர்புடைய பட்டத்திற்கான துறையைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*<br>*நீங்கள் முதுமானி தகுதி பெற்றிருந்தாலும், நீங்கள் எந்த துறையில் இளமானி பட்டம் பெற்றீர்கள் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.*<br>*நீங்கள் முதுமானி பட்டம் பெற்றிருந்தாலும், இளமானி பட்டம் இல்லையென்றால், வேறு என்பதை இங்கே தேர்ந்தெடுக்கவும். பிறகு கீழே உள்ள வெற்றுக் கூட்டில் "இளமானிப் பட்மொன்று இல்லை" "No basic degree"எனப் பதிவு செய்யவும்.* |
| *6.3* | *உங்கள் இளமானி பட்டம் / பட்டங்கள்*<br>*கீழ்தோன்றும் பட்டியலில் இருந்து உங்கள் இளமானி பட்டப் படிப்பைத் தேர்ந்தெடுக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட இளமானி பட்டங்கள் இருந்தால், இரண்டு இளமானி பட்டங்களை பதிவுசெய்வதற்கு வாய்ப்பு உள்ளது.*<br>*நீங்கள் பெற்ற இளமானி பட்டம் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால், "வேறு" என்பதைத் தேர்ந்தெடுத்து, நீங்கள் பெற்ற பட்டத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும். உங்களிடம் இளமானி பட்டம் இல்லையென்றால், அதாவது வினா 6.2ல் "இளமானி பட்டம் இல்லை" என்பதை விடையாகக் குறித்திருந்தால், இங்கேயும் "வேறு" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் கீழே உள்ள வெற்றுக் கூட்டில், "பொருத்தமற்றது" என்பதை தெளிவாகக் குறிப்பிடவும் .* |
